# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண் 6
# 2026, பிப்ரவரி 18, புதன்கிழமை
# மாசி 6, திருவள்ளுவர் ஆண்டு – 2057

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, **மாண்புமிகு பேரவைத் தலைவர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

**"உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றா**
**தெழுவாரை எல்லாம் பொறுத்து."**

(பல்வேறு தொழில் புரிகின்ற மக்களின் பசி போக்கிடும் தொழிலாக உழவுத்தொழில் இருப்பதால் அதுவே உலகத்தாரைத் தாங்கி நிற்கும் அச்சாணி எனப்படும்.)

## 1. இரங்கற் குறிப்புகள்

கீழ்க்காணும் சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அறிவித்தார்:–

**1. திரு. ந. சுந்தரம்**
**2. திரு. கு. லிங்கமுத்து**

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.

## 2. இரங்கல் தீர்மானங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** அவர்கள் கீழ்க்காணும் இரங்கல் தீர்மானங்களை பேரவைமுன் வைத்தார்கள்:–

(i) திரு. அஜித் பவார், மகாராஷ்டிர மாநிலத் துணை முதலமைச்சர் அவர்கள் மறைவு குறித்து.

"தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவரும், மகாராஷ்டிர மாநில துணை முதலமைச்சருமான திரு. அஜித் பவார் அவர்கள் 28.1.2026 அன்று நிகழ்ந்த விமான விபத்தில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

மகாராஷ்டிர மாநிலத்தின் ஆளுமைமிக்க அரசியல் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த திரு. அஜித் பவார் அவர்கள் துணை முதலமைச்சர், நிதியமைச்சர், மக்களவை உறுப்பினர், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் எனப் பல்வேறு உயரிய பொறுப்புகளில் திறம்பட மக்கள் பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், மகாராஷ்டிர மாநில மக்களுக்கும், தேசியவாத காங்கிரஸ் கட்சியினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது."

(ii) முனைவர் ச.சீ. இராசகோபாலன், மூத்த கல்வியாளர் அவர்கள் மறைவு குறித்து.

"மூத்த கல்வியாளர் முனைவர் ச.சீ. இராசகோபாலன் அவர்கள் 3.2.2026 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

முனைவர் ச.சீ. இராசகோபாலன் அவர்கள் அரசுப் பள்ளி தலைமை ஆசிரியராகப் பணியாற்றி, பள்ளிக் கல்வித் துறையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சீர்திருத்தங்களில் முக்கியப் பங்காற்றியவர். சமச்சீர்க் கல்விக் குழுவின் உறுப்பினராக இருந்து தமிழ்நாட்டின் கல்வி மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.

..2

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவர்தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

மேற்காணும், இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.

3. <u>வினாக்கள் – விடைகள்</u>

வரிசை எண்கள் 21 முதல் 30 வரையுள்ள உடுக்குறியிட்ட வினாக்கள் பேரவையில் வினவப்பட்டு விடையளிக்கப்பட்டன.

4. <u>ஒன்றிய – மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் அறிக்கை அளித்தல்</u>

ஒன்றிய – மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் (பகுதி–1) அறிக்கையை பேரவையில் சமர்ப்பிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரியதற்கிணங்க மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

5. <u>2026–2027–ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை மற்றும் 2026–2027–ஆம் ஆண்டிற்கான வேளாண்மை இடைக்கால நிதிநிலை அறிக்கை</u>

2026–2027–ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை மற்றும் 2026–2027–ஆம் ஆண்டிற்கான வேளாண்மை இடைக்கால நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின் மீது பொது விவாதம்.

கீழ்க்காணும் உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர்:–

1. திரு. கே.பி. முனுசாமி
2. திரு. ஐ.பி. செந்தில் குமார்
3. திருமதி ஆ. தமிழரசி
4. திரு. JMH. அசன் மௌலானா
5. திரு. G.V. மார்க்கண்டேயன்
6. திரு. K. மாரிமுத்து
7. டாக்டர் நா. எழிலன்
8. திரு. மு. ஜெகன்மூர்த்தி

பேரவை பிற்பகல் 2.24 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் 2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19–ஆம் நாள் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்குக் கூடும்.

முனைவர் கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்.